# RTO அதிகாரிகள் கதறல்...







## ஆணையர் அலுவலகத்தில் பள்ளி தாளாளர்கள் போராட்டம்

**ஊ**ருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி" என்று ஒரு பழமொழி உண்டு. இது யாருக்குப் பொருந்துகிறதோ, இல்லையோ, தமிழக போக்குவரத்துத் துறைக்கு மிகச்சரியாக பொருந்துகிறது.

ஆம்! எந்த ஆட்சியாக இருந்தாலும் சரி, அரசு விழாக்கள், பெரும் விளையாட்டு நிகழ்ச்சிகள், ஏன், ஆளுங்கட்சி மாநாடுகள், பொதுக் கூட்டங்கள் ஆகிய அனைத்திற்கும், தனியார் பஸ்கள், தனியார் பள்ளி வாகனங்கள் ஆகியவற்றை ,கேட்டுப் பெறுவார்களோ, அல்லது மிரட்டி வரவழைப்பார்களோ , அது போக்கு வரத்துத் துறை அதிகாரிகளின் பணி என்பது எழுதப்படாத ஒரு சட்டமாகவே உள்ளது. *(இந்த பாவங்களை எல்லாம் எங்கு கொண்டு போய் தீர்க்கப்போகிறார்களோ போக்குவரத்து அதிகாரிகள் என்பது தெரிய வில்லை)*

இதனால் பெரும் மன உளைச்சலுக்கும், கூடவே ஊழலுக்கும் துணை போகும் நிலைக்கு தள்ளப் படுகிறார்கள், வட்டார போக்குவரத்து அலுவலக, RTOக்களும், அதன் ஆய்வாளர்களும் மற்றும் தொழில்நுட்பம் அல்லாத பாணியாளர்களும் ஆவர்.

தற்போதும், போக்குவரத்து துறை அதிகாரிகளுக்கு அப்படி ஒரு இக்கட்டான நிலை ஏற்பட்டிருக்கிறது, ஆம், விரைவில் நடைபெற உள்ள 'செஸ் ஒலிம்பியாட்' விளையாட்டு விழாவிற்கு, மாணவ, மாணவிகளை அழைத்து வருவதற்கும், விழாப் பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகளை அழைத்து வருவதற்கும் வாகனங்களை ஏற்பாடு செய்யும்படி போக்குவரத்துத் துறை அதிகாரிகளுக்கு உத்தர விட்டுள்ளது அரசு.

தமிழகம் முழுவதும், ஒரு RTO அலுவலகத்திற்கு பத்து பேருந்துகள் ஏற்பாடு செய்து அனுப்ப வேண்டும் என்று கட்டளையிடப்பட்டிருக்கிறது. போக்குவரத்து ஆய்வாளர்களும் உடனடியாக களத்தில் இறங்கி, தனியார் பஸ் உரிமையாளர்களிடம் பேசி பேருந்துகளுக்கு ஏற்பாடு செய்து வருகின்றனர். தனியார் பஸ் உரிமையாளர்களும் தலையெழுத்தே என்று ஒப்புக் கொண்டுள்ளனர்.












அதேபோல் தனியார் பள்ளி உரிமையாளர்களிடம் கேட்கப்பட்டது. ஆனால் என்றுமில்லாத கதையாக அவர்களிடமிருந்து பெரும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. இப்படி அடாவடியாக வாகனங்களைக் கேட்பதைக் கண்டித்து வரும் 11–07–2022 அன்று சென்னை சேப்பாக்கத்தில் உள்ள போக்குவரத்துத் துறை கமிஷனர் அலுவலகம் முன்பு அரசை கண்டித்து தனியார் பள்ளி வாகன உரிமையாளர்கள் சார்பாக கண்டன ஆர்ப்பாட்டம் நடத்த உள்ளனர்.

சரி, ஏன் இந்த வழக்கத்திற்கு மாறான கொந்தளிப்பு ? அதற்கு இரண்டு காரணங்கள்.

ஒன்று, இந்த விழாவிற்கு வாகனங்களை டீசல் போட்டு அனுப்புவது மட்டுமில்லாமல் கூடவே மற்றொரு செலவும் வைக்கப்பட்டிருக்கிறது. அது விழாவை விளம்பரப்படுத்தும் விதமாக முதல்வர் படத்துடன், ‘செஸ் ஒலிம்பியாட்’ வாசகங்கள் அடங்கிய கலர் கலரான ஸ்டிக்கர்கள் பஸ் முழுவதும் ஒட்டப்பட வேண்டும் என்று உத்தரவு. இதன்படி அந்த, ஸ்டிக்கர்கள் ஒரு சென்டி மீட்டருக்கு நூறு ரூபாய் என்ற அளவில் ஒரு வாகனத்திற்கு ரூ.40,000 வரை ஆகிறது. இதுவும் வாகனம் அனுப்புகிறவர் தலையில் கட்டப்படுகிறது. வாகனங்களின் நீளம், உயரம் அளவுகளை பொறுத்தும், மற்றும் சிறிய அளவு வாகனங்கள் என்றாலும் ஒட்டப்படும் ஸ்டிக்கர்களை பொறுத்து தொகைகள் குறையும்.

இரண்டாவது, எந்தப் பள்ளியுமே , தங்கள் பள்ளிக்கு தேவையான அளவு வாகனங்கள் வைத்திருப்ப தில்லை. இந்த விளையாட்டு விழா பள்ளி நாட்களில், நடைபெறுவதால், வாகனங்களை அனுப்புவதில் நிர்வாகிகளுக்கு பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. மேலும் இந்த இடத்தில் நாம் ஒரு முக்கிய விஷயத்தை குறிப்பிட வேண்டியுள்ளது.

பெரும்பாலான பள்ளிகள், தங்களது பள்ளி மாணவர்களுக்கு தேவையான வாகனங்களில் பாதியளவு கூட வைத்திருப்பதில்லை. ஒரே ஒரு வாகனத்தை வைத்தும், காலை ஒன்பது மணிக்கு ஆரம்பிக்கும் வகுப்பு களுக்கு, மாணவர்களை காலை ஆறு மணி முதலே பல டிரிப்புகளாக ஏற்றி வந்து , பெற்றோர்களுக்கும், மாணவர்களுக்கும் பெரும் சித்ரவதையை செய்வதோடு, மாணக்கர்களுக்கும் பெரும் மனஉளைச்சலைத் தான் இந்த பள்ளி நிர்வாகிகளால் கொடுக்கப்பட்டு வருகிறது. இதனால் பல பெற்றோர்கள், பள்ளிக்கு பஸ் கட்டணம் என்ற தண்டத்தையும் அழுதுவிட்டு, தங்கள் குழந்தைகளை, வேறு தனியார் வாகனம் மூலமோ, அல்லது தங்களது டூவீலரிலோ பள்ளிக்கு அனுப்பி வைக்கும் அவலம் நடக்கிறது. அரசும் இதைக் கண்டு கொள்வதில்லை. காரணம் பெருகி வரும் மாணவ சக்திக்கு நிகரான பள்ளிகள் வேண்டுமே.

இருந்தாலும், ஒவ்வொரு பள்ளியும் தங்களுக்கு தேவையான வாகனங் களை கட்டாயம் வைத்திருக்க வேண்டும் என்றும், ஒவ்வொரு வாகனத்திற்கோ, அல்லது மூன்று வாகனத்திற்கு ஒரு வாகனமோ ஒரு ஸ்பேர் பேருந்து இருக்க வேண்டும் என போக்குவரத்து துறையோ அரசோ உத்தரவிட்டிருந்தால், இன்று இது போன்ற நல்லதொரு நிகழ்வுக்கு அதுவும், தமிழகத்திற்கு பெயர் வாங்கித் தரும் விளையாட்டுப் போட்டிகளுக்கு வாகனம் இல்லை என்றும், இதற்காக ஒரு போராட்டம் என்ற ஒரு அறிவிப்புகளையும், தனியார் பள்ளிகள் சொல்லும் நிலை ஏற்பட்டிருக்காது. கல்வியை வியாபாரமாக்கி, லட்சங்களும், கோடிகளுமாக வருமானம் ஈட்டி வரும் பள்ளி, கல்லூரி நிர்வாகத்திற்கு எல்லாம் இனி இரண்டோ அல்லது மூன்று பேருந்துகளுக்கு ஒரு ஸ்பேர் வேண்டும் என்ற ஒரு உத்தரவை அரசு உரு வாக்கினால் மட்டும்தான் அரசின் நலத்திட்டங் களை அறிந்து செயல்படாதவர்களுக்கு இந்த உத்தரவுகள்தான் அனைத்தையும்


நிர்மல்ராஜ் ஐ.ஏ.எஸ்.



மு.க.ஸ்டாலின்






புரியவைக்கும்.

அதேபோல் பஸ் உரிமையாளர்களின் நிலையும் இதுதான். பஸ்ஸிற்கு பணியாட்கள் மற்றும் எரி பொருட்களையும் கொடுத்து, மேலும் 40,000 ஸ்டிக்கர் செலவு என்றால், அவர்கள் வேதனையும் சொல்லி மாளவில்லை.

இந்த இடத்தில் நாம் மேலும் ஒரு முக்கிய விஷயத்தையும் குறிப்பிட்டே ஆக வேண்டும். இப்படி வலுக்கட்டாயமாக செலவுகள் திணிக்கப் படும்பொழுது, நாளை தனியார் பஸ் உரிமையாளர் களோ, பள்ளி உரிமையாளர்களோ, தங்கள் வாகனங்களை F.C. எனப்படும் தகுதிச் சான்றிதழ் பெற RTO அலுவலகம் வரும் பொழுது மோட்டார் வாகன அதிகாரிகளால் எப்படி நேர்மையான முறையில் நடந்து கொள்ள முடியும், ஏதோ ஒருவிதத்தில் அந்த பேருந்து நிர்வாகிகளோடு, இணக்கமாகத்தான் போக முடியும்.

அதேபோல் போக்குவரத்து அதிகாரிகள் தங்கள் கைகளில் இருந்து ஸ்டிக்கருக்கான செலவுகளை செய்யும் சூழல் ஏற்படுகிற போது போக்குவரத்துத் துறை ஆய்வாளர்களும், வேறு வழியின்றி தங்கள் பணிகளில் கண்டும் காணாமலும் தானே நடந்து கொள்ள நேரிடும். இதனால் ஊழல்கள் பெருகுவதோடு, பெருகும் விபத்துக்களும் தடுக்கப்பட முடியாமல் தானே போகும்.

எனவே, வாகனத்தை ஏற்பாடு செய்து தருவ தோடு, இந்த அதிகாரிகளின் பணிகளை முடித்து விட்டு, ஒதுங்கும் நிலையினை இந்த அரசே செய்து விட்டு, மேற்படியாக ஆகும் செலவினை, மற்ற அரசு துறைக்களுக்கான பொறுப்பில் விடப்படு மானால் இந்த போக்குவரத்து அதிகாரிகளால் பேருந்து நிர்வாகிகளோடு இணக்கமாக போகும் சூழல்கள் ஏற்படுவது தடுக்கப்பட்டு விபத்துக்கள் பெருகுவதும் குறைக்கப்படும்.

அதே நேரத்தில், அரசில், பத்திரப் பதிவுத் துறை, நெடுஞ்சாலைத்துறை, மாநகராட்சிகள், கனிமவள துறைகள் போன்ற பல துறைகள் லாபத்தில் இயங்கும் துறைகள் உள்ளன. இவற்றில் உள்ள அதிகாரிகளின் துணையுடன், அத்துறை யில் உள்ள வசதி படைத்த காண்டிராக்டர்கள் மற்றும் தொண்டுள்ளம் கொண்டோர் மூலம் இது போன்ற விழாக்களுக்கு ஏற்படும் இந்த போக்குவரத்துச் செலவை பகிர்ந்தளிக்கலாமே.

இதனாலும் ஊழல்கள் தடுத்து நிறுத்தப்படும். விபத்துக்கள் தவிர்க்கப்படும். தேவையற்ற போராட்டங்கள் மூலம் அரசுக்கு அவப்பெயர் ஏற்படாமல் இருக்கும். போக்குவரத்துத் துறை அதிகாரிகளின் பெரும் பணிச்சுமையும், மன உளைச்சலும் இல்லாமல் போகும். மேலும், எல்லா வற்றையுமே போக்குவரத்து துறை அதிகாரிகளே தான் பார்க்க வேண்டும் என்றால் மோட்டார் வாகன அதிகாரிகள் எங்குதான் செல்வார்கள் ?

எனவே, இவையனைத்தையும், போக்குவரத்து அமைச்சரும், திறமையான, நேர்மையான கமிஷனரான நிர்மல்ராஜ் அவர்களும் தீர ஆய்வு செய்து முதல்வரின் கவனத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

கண்டிப்பாக, தமிழகத்தில் நல்லாட்சி புரிந்து கொண்டிருக்கும் முதல்வர் மு.க.ஸ்டாவின் அவர்கள் கனிவுடன் பரீசீலித்து சிறப்பான முடிவினை எடுப்பார் என்றே நமக்குத் தோன்று கிறது.

செய்வார்களா அமைச்சரும், ஆணையரும் ? துறை அதிகாரிகளின் துயர் துடைப்பார்களா ?

நல்லதே நடக்கும் என்று நம்புவோம்.

**நெல்லை கோபால்**
மூத்த பத்திரிகையாளர்

07–07–2022 9994478389




# தனிப்பிரிவு இன்ஸ். மாற்றப்படுவாரா?

## தஞ்சையில் சீரழியும் சட்டம்–ஒழுங்கு!

ஒவ்வொரு மாவட்டங்களிலும் உள்ள மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களுக்கு எஸ்.பி.யின் தனிப்பிரிவு ஆய்வாளர் என ஒருவர் செயல்படுவது உண்டு, அப்படி தஞ்சாவூர் மாவட்ட காவல் காணிப்பாளர் திருமதி ரவளிப்பிரியா ஐ.பி.எஸ் அவர்களுக்கு தனிப்பிரிவு ஆய்வாளராக மணிவேல் என்பவர் செயல்பட்டு வருகிறார்.

பெயரிலே 'மணி' இருப்பதினாலவோ என்னவோ இவரது காட்டில் காசு, 'மணி', துட்டு என்பது எல்லாம் விடாத அடைமழைதான். ஆம். தஞ்சை மாவட்டம் முழுக்க உள்ள காவல் நிலையங்கள் எல்லாம் இவரது கண்ட்ரோலில் தான்' உள்ளது

எஸ்.பிக்கு சரிவர தமிழ் படிக்கத் தெரியாதது என்பதால், எஸ்.பி–யின் கண்களை கட்டிவிட்டு சகட்டு மேனிக்கு இந்த எஸ்.பி–யின் காவல் ஆய்வாளர் மணி வேல் கல்லா கட்டி வருகிறாராம். எனவே விஜிலென்ஸ் போலிசார் இவருக்குரிய இடங்கள் அனைத்திலும் சோதனைகளை மேற்கொண்டால் வருமானத்திற்கு மீறி சொத்து சேர்த்த பட்டியலில் மணிவேல் காவல் ஆய்வாளரும் இடம்பிடிப்பார் என தஞ்சை பகுதி மக்கள் புலம்பி தள்ளுகின்றனர்.

ஒவ்வொரு மாவட்ட காவல் கண்காணிப்பாளரின் கீழ் உள்ள தனிப்பிரிவின் காவல் ஆய்வாளரின் பணி என்பது, மாவட்டத்தில் உள்ள காவல் நிலையங்களில் உள்ள அதிகாரிகளின் செயல்பாடுகள், மற்றும், காவலர்களின் நிறை குறைகள் அவர்களது செயல்பாடுகள், அந்த நிலையத்திற்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள மக்களின்



### SP-யின் SBHC-யின் வசூல்... பெருகும் லஞ்சத் தொகைகள்!

**SP கவனிப்பாரா? லஞ்ச ஒழிப்பு அதிரடி காணுமா?**

தஞ்சாவூர் மாவட்டம் மதுக்கூர் காவல்சரகத்திற்கு உட்பட்ட பகுதிகளுக்குள் வரும் பல்வேறு கிராமங்களிலும் சமூக விரோத நடவடிக்கைகளும், அதற்கான தொழில்களும் பெருகி கொண்டே வருகிறது. உதாரணத்திற்கு...

வாட்டாகுடி வடக்கில் குடியிருந்து வரும் மகேந்திரன் என்பவர் சட்டத்திற்கு புறம்பாக கள்ள லாட்டரி மற்றும், கலப்பட மதுபாட்டில்களை விற்றதாக, இவனை திருவாரூர் மாவட்ட போலீஸ் கைது செய்து சிறையில் அடைக்கிறது (பார்க்க தினமலர் நாளிதழ்.) ஆனால் தஞ்சை மாவட்ட போலீஸ் வேடிக்கை பார்க்கிறது என்றும், அதற்கு மதுக்கூர் SP-யின், SBHC செந்தில்குமார்தான் காரணம் என்றும், இந்த மகேந்திரனிடம் மட்டும் வாரம் மாமுலாக, 2,500மும், மாத மாமுலாக ரூபாய் பத்தாயிரம் லாட்டரிக்கும், இது போக கலப்பட மதுவுக்கு ஒரு பெருந்தொகையினையும் பெற்றுக்கொண்டும் வருகிறார் SBHC செந்தில்குமார்.

இதுபோக, வார மாமுல் தவிர்த்து அவ்வப்போது ஓசியில் பீரும், பிராந்தியும் SBHC செந்தில்குமார், வாங்கி கொள்வதோடு, அந்த பக்கம் மற்றொரு வேலையாக வந்ததாக கூறியும், திடீர் விசிட் செல்கிற போதும், ரூபாய். 500 வாங்கிகொண்டு செல்வதோடு, இவரை போன்ற சமூக விரோத தொழில்களில் ஈடுபடுவோர்களிடம் எல்லாம் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டு ஒவ்வொரு நபரிடமும், ஒரு பெருந்தொகைகளை மாத, மாதம் பெற்றுக் கொண்டு கன ஜோராக கல்லா கட்டிக்கொண்டு வருகிறார் தஞ்சை SP-ன் SBHC செந்தில்குமார் என்று பதிவு செய்து நமது மூத்த பத்திரிகையாளர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு புகார் அளித்தும் அந்த புகார் மனு மீது இதுவரை எந்தவொரு விசாரணையும் நடத்தப்படவில்லை என்பதற்கான விபரமான பதிவுகள்தான் இது என்றாலும் உரிய ஆதாரத்தோடு பதிவு செய்தும் மகேந்திரனை இதுவரை ஏன் மதுக்கூர் மற்றும் பட்டுக்கோட்டை கலால் போலிசாரால் கைது செய்யப்படவில்லை? லஞ்சம் வாங்கிய போலிசார் மீதும் ஏன் நடவடிக்கை இல்லை என தஞ்சாவூர் மாவட்ட SP-யின் கனிவான கவனத்திற்கு பதிவு செய்யப்படும் நமது மூத்த பத்திரிகையாளரின் குமுறல்கள்தான் இது. அதுமட்டுமல்லாது சமூக விரோத நபர்களிடம் லஞ்சம் பெற்று வருவதை

மகேந்திரன்

தினமலர் நாளிதழில் வெளிவந்த
திருவாரூர் போலீஸ் மகேந்திரனை கைது செய்த செய்தி

32 — அரசியல் ஒற்றன் — ஜீன் 2022

மகேந்திரனைப் பற்றி பத்திரிகைகளில் வந்த செய்திகள்



திருவாரூர் அருகே வாகன சோதனை

### ஆன்லைன் லாட்டரி விற்பனையாளர் கைது

**பணம், செல்போன் பறிமுதல்**

மன்னார்குடி, ஜன.26: திருவாரூர் அருகே வாகன சோதனையின்போது ஆன்லைன் லாட்டரி விற்பனையாளரை போலீசார் கைது செய்தனர்.

திருவாரூர் மாவட்டம் பெருகவாழ்ந்தான் கடை வீதியில் எஸ்எஸ்ஐ. சங்கர் தலைமையில் தனிப்படை போலீசார் நேற்று மதியம் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது அவ்வழியே வந்த பைக்கை சந்தேகத்தின் பேரில் மடக்கி விசாரித்ததில், பைக்கில் வந்த நபர் முன்னுக்கு பின் முரணாக பேசியதால் சந்தேகமடைந்த போலீசார் அவரை பெருகவாழ்ந்தான் காவல் நிலையத்திற்கு கொண்டு சென்றனர். அங்கு அவரிடம் போலீசார் கிடுக்கிப்பிடி விசாரணை மேற்கொண்டனர்.

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை அடுத்த வாட்டாக்குடி வடக்கு கிராமத்தை சேர்ந்த மகேந்திரன்(42) என்பதும், இவர் பல்வேறு வாட்ஸ் அப் குழுக்களை உருவாக்கி, அதன் மூலம் அரசால் தடை செய்யப்பட்ட லாட்டரி விற்பனையில் ஈடுபட்டு வந்ததும் தெரிய வந்தது. இதுகுறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து மகேந்திரனை கைது செய்து அவரிடமிருந்து ரூ.31,740 ரொக்க பணம், செல்போன் மற்றும் பைக் பறிமுதல் செய்தனர்.

மகேந்திரன்



மகேந்திரன்

அனைத்து நிலைகளையும், நாடி துடிப்பு அறிந்தும், சட்டம் ஒழுங்கு சீர்குலையாமல் காப்பதற்கான உரிய நடைமுறைகளை தெரிந்து, எஸ்.பி. யின் கவனத்திற்கு அவ்வப்போது கொண்டு சேர்க்க வேண்டும். இதற்காக மாவட்டம் எஸ்.பி.யின் கீழ் பணியில் உள்ள தனிப்பிரிவு ஆய்வாளரின் கீழ், மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு காவல் நிலையங் களிலும் சீருடை பணியில்லாத SBHC–கள் பணிக்கு அமர்த்தப் படுவர்.

இந்த காவலர்கள், அந்தந்த சரக எல்லைக்குள் நடக்கும் கட்சி, மற்றும் கண்டன கூட்டங்கள், அரசுக்கு எதிராக நடக்கும் செய்திகள், அந்தந்த பகுதிகளில் நடக்கும் சமூக விரோத தொழில்கள், காவல் நிலையத்தில் உள்ள ஆய்வாளர் மற்றும் சக காவலர்களின் பணிகள் குறித்த தகவல்கள் எல்லாம் அறிந்து அந்த தனிப்பிரிவு ஆய்வாளரிடம் தெரிவிக்க வேண்டும், அதனை எல்லாம் எஸ்.பி. அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று ‘வரும் முன் காத்தல்’ போன்ற நடவடிக்கைகளை எஸ்.பி. மூலம் எடுப்பதற்கான பணிகளை செய்வது தான் SP–யின் தனிப்பிரிவு ஆய் வாளரின் பணியாகும்.

எனவே SP-யின் தனிப்பிரிவு ஆய்வாளரது சொல்லுக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து காவல் அதிகாரிகளும் அலறுவது உண்டு. ஏன்னெனில் SP–க்கு இப்படி ஒரு தனி ஆய்வாளராக செயல்படுபவர், எதைச் சொன்னாலும் மாவட்ட உயரதிகாரியான இந்த மாவட்ட SP–க்கள் நம்புவதால், அந்த மாவட்டத்தில் உள்ள எந்த ஒரு மூத்த அதிகாரிகளும் இந்த எஸ்.பி.யின் தனிப்பிரிவு ஆய்வாளருக்கு தலைவணங்கி செல்வது உண்டு. அதனை பயன்படுத்தி, இந்த தனிப்பிரிவு ஆய்வாளருக்கு கீழ் உளவாளியாக அந்தந்த காவல் நிலையத்தில் இருந்து தகவல் அறிந்து செல்லும் உளவாளிகளான அந்த சீருடை போடாத காவலர் மூலம், அதாவது அந்த காவல் நிலையத்தின் SBHC காவலர்கள் சமூக விரோத தொழில்கள் என்னென்ன நடக்கிறது. காவல்நிலையத்திற்கு வரும் மாமுல்கள் எப்படி ? என அனைத்து தகவல்களையும் பெற்று மாதம் மாதம் ஒரு பெருந்தொகையினை அந்தந்தந்த காவல் நிலையத்தில் இருந்து பெறுவது ஒருபுறம் இந்தாலும், SBHC – காக்கிகளின் முலமும் நேரிடையாக அந்த சமூக விரோத தொழில்களை செய்வோர்களிடமிருந்து எஸ்.பி. இன்ஸ்–க்கு என தனியாக என ஒவ்வொரு கட்டிங்குகளையும், இந்த SBHC மூலம் அந்த SP – யின் தனிப்பிரிவு ஆய்வாளர் பெற்றுக்கொள்வதும் உண்டு. இப்படியொரு லஞ்ச லாவண்யங்கள் எல்லா மாவட்டங்களிலும் நடக்கிறது என்று சொல்வதற்கில்லை என்றாலும் சில மாவட்டங்களில் இப்போதும் நடந்து கொண்டுதான் உள்ளது.

அந்த வகையில் இப்போது தஞ்சாவூர் மாவட்டத்தில் இந்த ஊழல்கள் கொடிகட்டி பறக்கிறது. ஆம்.கடந்த சில நாட்களாக இணைய தளத்தில் வைரலாகி வரும் ஒரு விடியோவில் தஞ்சாவூரில் உள்ள திலகர் திடல் அருகில் உள்ள சாலையோர வியபாரிகளை நான்கைந்து சிறுவர்கள் ஒன்று சேர்ந்து தாக்கியும், கடைக்காரரின் மொபைல்போனை பறித்துச்செல்லும் காட்சி வைரலாகி வருவது பார்ப்போர்களை திகைக்க வைக்கிறது.

அந்த வைரலான வீடியோவில், இந்த சிறுவர்கள் மீது சொல்லப்படும் குற்றச்சாட்டு, அந்த சிறுவர்கள் கஞ்சா போதையில் செய்த தகராறு என கூறப்படுவதால், தஞ்சை மாவட்ட காவல் துறைக்கு களங்கம். அதாவது கஞ்சா விற்பனை தஞ்சாவூரில் சர்வசாதாரணமாய் விற்பனையாகி வருகிறது என்றால் அதற்கான காக்கி அதிகாரிகளின் ‘மாமுல்’ எவ்வளவு இருக்கும் என்ற பிரச்சனைகள் எழும் என்பதால், உடனே இரண்டு மாத்திரையின் பெயரை குறிப்பிட்டு இதுதான் போதைக்கு காரணம் என்றும், அந்த மாத்திரைகளை மருத்துவர் சீட்டு இல்லாமல் இனி தரக் கூடாது என எச்சரித்துள்ளோம் என கூறி, காவல்துறை தங்கள் களங்கத்தை துடைத்துக் கொள்ள முயற்சி செய்துள்ளது.



SBHC – காவலர் செந்தில்குமார்

காக்கி அதிகாரிகளால் பரப்புரை யாக்கப்பட்ட, அந்த மாத்திரை யின் பெயரை காட்சி ஊடக மும் பெயரை குறிப்பிட்டு சொல்லி பரப்புரை

செய்திருப்பதால், அந்த ஐந்து சிறுவர்களுக்கு தெரிந்த அந்த மாத்திரையின் பெயர், இன்றைக்கு பல பள்ளி, கல்லூரி, மாணக்கர்களுக்கும் பரிட்சயம் ஆகிவிட்டது. ஆனால் தஞ்சாவூர் காவல்துறையினரின் ‘மாமூல்’ விவகாரங்கள் வெளியில் தெரியக்கூடாது என்பதற்காகவே, விஷயங்களை மாற்றி காஞ்சாவை மறைக்க முயற்சித்து இருக்கிறார்களே தவிர, சமூக மக்கள் மீது அக்கறை என்பது துளிகூட இல்லை என்பதை தான் காக்கி அதிகாரிகளின் செயல்கள் காட்டுகிறது.

அதாவது, காவல் அதிகாரிகள் தங்களை காப்பாற்றி கொள்ளத்தான் மாத்திரை மீது பழியை போட்டு, அந்த மாத்திரையின் பெயரையும் குறிப்பிட்டு ஊடகத்திற்கு செய்தி கொடுத்துள்ளார்கள், காவல் அதிகாரிகளுக்கு இருக்க வேண்டிய சமூக அக்கறைகள் இருந்திருந்தால் அந்த மாத்திரையின் பெயரை உச்சரிக்காமல், மருத்துவ தேவைக்கான மருந்து என கூறி, அந்த செய்தியினை பரப்புரையாக்கப் பட்டிருக்கலாம்.

இப்படி காக்கி அதிகாரிகளுக்கு அன்றாட பணிகளுக்கான உரிய அக்கறைகள் இல்லாமல் போனதில் இருந்தே இவர்களது லஞ்ச ஊழல்கள் வெளியில் தெரிந்துவிடக்கூடாது என்பதற்காகவே மருத்துவ மருந்தின்



கஞ்சா போதையில் சிறுவர்கள் தகராறு

மீது காரணம் சுமத்தி அந்த துயரமான நிகழ்வுக்கு ஒரு சப்பை கட்டுகட்டி தங்களது தவறை மறைத்து நியாயத்தை நிலைநிறுதி இவர்களது ஊழல்களை மறைத்துவிட்டனர்.

காவல் அதிகாரிகள் சொல்வது போல், அந்த சிறார்கள் உட்கொண்டது மருத்துவ மாத்திரைகள் என்றால், அந்த சிறார்களில் ஒரு குற்றவாளி கைது செய்யப்பட்டுள்ளதால் அந்த சிறாருக்கு மாத்திரை கொடுத்த அந்த மாத்திரையின் விற்பனை யாளர் அதாவது மெடிக்கல் கடை நிர்வாகி மீது வழக்கு போடப்பட்டதா ? அவர் ஏன் கைது செய்யப்படவில்லை ? என்று பல கேள்விகள் எழும் நிலையில் எதற்கும் பதில் கிடைக்கவில்லை.

இவை பற்றி நமது மூத்த பத்திரிகையாளர் ஒருவர் கூறுகையில், இன்னும் சில காலம் எஸ்.பி. இன்ஸ்பெக்டராக மணிவேல் அவர்களே நீடிக்கிற பட்சத்தில், தஞ்சை நகரம் என்பது, எல்லா தவறுதல்களான தொழில்களுக்கு எல்லாம் தலைநகரமாக தஞ்சாவூர் விளங்கும் என்ற நிலையாகிவிடும். தஞ்சாவூர் மாவட்டம் முழுக்க உள்ள காவல் நிலையங்களில் இருந்து, எஸ்.பி–யின் தனிப்பிரிவு ஆய்வாளரிடம் உள்ள SBHC–க்கள் மூலம் வார வார மாமூலகள்களை பெற்று வளம் கொழித்து வரும் காவல் ஆய்வாளர் மணிவேல் இருக்கும் வரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பெயருக்கு களங்கம்தான் ஏற்படும் என்றதோடு, காவல் நிலையத்தில் பெறப்படும் புகார்கள் பெரும்பாலும் கட்ட பஞ்சாயத்தாக பேசிக்கப்பட்டு, தினம் தினம், ஒவ்வொரு காவல் நிலையமும் பல பல ஆயிரங்களை சம்பாதித்து மணிவேல் –க்கு கப்பம் கட்டுகிற நிலையைத்தான் இந்த எஸ்.பியின் இன்ஸ் பெக்டரால் ஏற்படுத்தப்பட்டு இருப்பதாக கூறப்படுகிறது.



ரவளிபிரியா
ஐ.பி.எஸ்.

அதேநேரத்தில் காவல் நிலைய அதிகாரிகளால் புகார்தாரருக் குரிய புகார்களில் வழக்கு பதிய வேண்டும், நியாயம் வேண்டும் என கோருகிறவர்கள் யாராக இருந்தாலும் சரி, அந்தந்த காவல்

நிலையத்தின் SBHC– காக்கிகளோ அல்லது SP–யின் இன்ஸ் மணிவேல் அவர்கள கண் அசைத்தால் மட்டும்தான் வழக்குள் பதியபடுகிறதாம்.

இதற்கும் ஒரு உதாரணத்தை, நமது மூத்த பத்திரிகையாளரால் முன்வைக்கப்பட்டது. அதாவது தஞ்சாவூர் மாவட்டம் வாட்டாகுடி கிராமத்தை சேர்ந்த சிலரால் தனது ஒட்டுனர் தாக்கப்பட்டது குறித்து புகார் அளிக்கப்பட்டு, மூன்று மாதங்களுக்கு மேல் ஆகியுள்ளது. நமது மூத்த பத்திரிகையாளரின் ஒட்டுனர் தாக்கப்பட்டது குறித்தும், கலப்பட மது மற்றும் கள்ள லாட்டரி விற்று வரும் மகேந்திரன் பற்றியும் புகார் கொடுக்கப்பட்டு எந்த நடவடிக்கையும் மதுக்கூர் போலிசாரால் இல்லை என்றதும், கடந்த வாரம் மகேந்திரன் மீது நடவடிக்கை கோரி எஸ்.பி. மேடம் அவர்களுக்கே நேரிடையாக தகவல்களை கொண்டு சேர்த்த பின்புதான் எஸ்.பி.ரவளிப்பிரிய அவர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன் பின் சிறைக்கு சென்று ஜாமீனில் மகேந்திரன் வெளிவந்தாலும் தற்போது கனஜோராக தொழிலை விரிவுபடுத்தி செய்வதோடு, கூடுதலாக அந்த கிராமத்திலுள்ள சிலரை பங்குதாரராக சேர்த்து தொழிலை விரிவுபடுத்தி நடத்தி வருகிறானாம். இது ஒருபுறம் மதுக்கூர் போலீஸ் SBHC செந்தில்குமார் ஆசியோடு தொடர்ந்தாலும், தனது ஒட்டுனரை அந்த கிராமத்தினர் தாக்கியது குறித்தும், அவனிடம் வழிபறி செய்த இருசக்கர வாகனம், மற்றும் அவனது துணி பேக்–யையும், புதிய கைபேசியை சாலையில் எறிந்தது குறித்தும் கொடுத்த புகாருக்கு இதுவரை விசாரணையும் இல்லை. உரிய நடவடிக்கை எடுக்க கோரி விசாரணைக்கும் தன்னை அழைக்க கோரி 91CrPC மற்றும் 160 CrPC படியான அழைப்பாணையை அந்த மூத்த பத்திரிகையாளரால் கோரப்பட்டும் இன்றுவரை எந்த நடவடிக்கையும் இல்லை.

இதில் "நீ இங்கு வரணும் நாங்க பொய் கேஸ் போட்டு உன்னை உள்ளே வைப்போம்" என்கிற மிரட்டல் வேற இப்படி ஒரு நிலைதான் இப்போது வரை எஸ்.பி. இன்ஸ் மணிவேல்–ன் அரவணைப்பில் SBHC செந்தில்குமார் முறை தவறான பணிகளை செய்துகொள்ளும் நிலைகள் நீடித்து வருகிறது.

மேலும், காவல் நிலையத்தில் பெறுப்படும் எந்த புகாருக்கும் CSR கொடுக்கப்படுவதே இல்லை என்பதாலும், பல்வேறு கிராமங்களை உள்ளடக்கியது மதுக்கூர் காவல் நிலையம் என்பதால், கிராமத்தினர் கொடுக்கவரும் புகார்தாரர்களிடம் எல்லாம் மிரட்டலாக பேசுவதும், சிறிதும் மரியாதை இல்லாமல், வயதானவர்களை கூட அவமரியாதையுடன் பேசுவது என தொடர்ந்து வரும் நிலையில்தான் அங் குள்ள காக்கிகள் செயல்பட்டு வருகின்றனர்.



சைலேந்திர பாபு

SP அவர்களே கிராம கிரமமாக செல்வாரானால் SBHC–ன் செந்தில்குமாரின் அடாவடி நடவடிக்கைகளோடு SPயின் மணிவேல் ஆட்டங்களையும் நேரிடையாக SP அறியமுடியும் என்கிறார். மேலும், தற்போது வெளிவந்த இந்த சிறார் வீடியோக்களை தவிர, மதுக்கூர் காவல் நிலைய எல்லைக்குள் உள்ள கிராமங்களில் உள்ள பெட்டிக் கடைகளில் பீர் பிராந்தி விற்பது, மற்றும் வாட்டாகுடியில் கலப்பட மதுவும் கள்ள லாட்டரி விற்பது என பல செய்திகள் பல பிரபல நாளிதழில்களிலும், மற்ற வீடியோக்களும் இணைய தளங்களிலும் வெளிவந்து மதுக்கூர் காக்கிகளின் லஞ்ச லாவண்யங்களை தோலுரித்துக்காட்டி வந்தாலும், தனிப்பிரிவு SP இன்ஸ்–ன் படு சாமர்த்தியத்தால் மட்டுமே SP–யின் கவனத்திற்கே எதையும் கொண்டு செல்லாமல் மாவட்டத்தில் பவர் புல்லாக இருந்து, வருமானத்திற்கு மீறி சொத்து சேர்த்துவிட்டதாக பலராலும் கூறப்பட்டு வருவதால் விஜிலென்ஸ் இயக்குனர் அவர்களும் இவரது பணிகளை கூர்ந்து கவனித்து, மணிவேல் மற்றும் செந்தில்குமார் மீதும் உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும். மேலும் ஒரு மூத்த பத்திரிகையாளருக்கே இந்த கதி என்றால் அங்குள்ள பொதுமக்களின் நிலைகள் எப்படியிருக்கும் என்பதை பற்றி இனி நாம் சொல்லி உயர் அதிகாரிகளுக்கு தெரியவேண்டியதில்லை. எனவே உரிய அதிரடிகள் தொடர்ந்தால் சரி.

**நெல்லை கோபால்**
மூத்த பத்திரிகையாளர்

07–07–2022 9994478389



# ஆணையர் கையெப்பம் இடுவாரா?

# வ.போ. அதிகாரிகள் கேள்வி? விழி பிதுங்கும் 'விஷ்வா' டீம்!

போக்குவரத்து துறையின் தலைமை அலுவலகம் சென்னையில் உள்ள எழிலகத்தில் ஒன்று மற்றும் இரண்டாம் தளங்களில் செயல்பட்டு வருகிறது. தற்போது RTO மற்றும் மேட்டார் வாகன ஆய்வாளர்களது பணியிடமாற்றத்திற்கான பட்டியல்கள் மேற்கண்ட தலைமையகத்தில் தயார் செய்யப்பட்டுவரும் நிலையில், முதல்வரை சுற்றியுள்ள ஒரு V VIP –ன் பெயரை சொல்லி, பல, பல, லட்சங்கள் கோடிகளில் பேரம்பேசப்பட்டு 'விஷ்வா' கணக்கில் பயோடேட்டாக்கள் ஏற்றப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் திடீரென புதிய ஆணையராக அதிரடியான, நேர்மையான அதிகாரியான நிர்மல்ராஜ் IAS அவர்கள் பொறுப்பேற்றிருப்பதால் பணியிட மாற்றத்திற்கான, மற்றும் முறைகேடான கோப்புகளில் எல்லாம் கையெழுத்திடுவாரா என்ற கேள்வி எழுந்த நிலையில் விஷ்வா டீம் புரோக்கர்கள் கதிகலங்கி, விழிபிதுங்கி வருகின்றனர். அதே நேரத்தில், கொளப்பாக்கம் விஜயகுமார் என்பவர் கனமவளங்களை ஏற்றிச் செல்லும் கனரக வாகனங்களில் இருந்து மாமுல் பெற்று வரும் இவரால், இவருக்கு அடங்காத டிப்பர் லாரிகளின் மீதும் ஓவர்லோடு வழக்கு பதியுங்கள் என கூறி மோட்டார் வாகன அதிகாரிகளையும் மிரட்டி வந்ததில், RTO வட்டாரங்களிலும் இவரது தலையீடுகள் அதிகம் இருந்து வந்தது.

இந்த நிலையில் கனிமவளத்தில் இருந்து, போக்குவரத்து துறைக்கு வந்த ஆணையர் நிர்மல்ராஜ் என்பதால், இவரு தனக்கு ரொம்ப 'குளோஸ்' என்றும், போக்குவரத்தில் பதவி ஏற்கும் முன் தன்னிடம் கூறிவிட்டுத்தான் டுட்டியிலே ஜாயின் பண்ணினார் என்றும், அதன் பின் முதல்வரை பார்த்து ஆசி வாங்க சென்றதும், அடுத்து அமைச்சரை பார்த்ததும், அமைச்சரிடமே, ஆணையரான நிர்மல்ராஜ் அவர்கள் முதல்வர் என்னிடம் துறையின் செயல்பாடுகள் பற்றி ரொம்பவருத்தப்பட்டார் என்றும், போக்குவரத்து துறை ரொம்ப மோசமாக உள்ளது நீங்கள்தான் சரி செய்ய வேண்டும் என்றும், ஆணையரை வாழ்த்தி அனுப்பிய செய்தியை கூட, ஆணையர் நிர்மல்ராஜ் அவர்கள் தலைமைச் செயலகத்தில் இருந்தே என்னிடம் போனில் தெரிவித்தார். இப்படி எதை எடுத்தாலும் என்னிடம் சொல்லாமல் ஆணையர் செய்ய மாட்டார். அந்தளவுக்கு எனக்கு ஆணையர் வெரி குளோஸ் என கொளப்பாக்கம் விஜயகுமாரால் பரப்பரையாக்கப்பட்டு வருவது ஒரு செய்தியாக உலா வந்தாலும், எல்லாவற்றையும் நானே கரெக்ட் பண்ணுகிறேன் எனவே, மோட்டார் வாகன ஆய்வாளர்களது பணியிட மாற்றபட்டியலை நீங்க ரெடி செய்யுங்கள் நான் பார்க்கிறேன் என, 'விஷ்வா'க்கு உத்திரவிட்ட விஜயகுமார் TC தனது கட்டுக்குள் என்கிற ரீதியில் இந்த கொளப்பாக்கம் விஜயகுமார் பில்டப் இருக்கிறதாம். எனவே, இன்று ஆய்வாளருக்கான 20 பேருக்கு பணியிட மாற்றம் வருவதாக தகவல். இதில் நான்கு பேர்களது 'செலான்' வரவுகளில் சற்று வில்லங்கம் இருப்பதால், ஒன்றிரண்டு பேர் பணியிட மாற்றப் பட்டியலில் குறைந்தாலும், இன்னும் சில மணி நேரங்களில் 18 பேருக்காவது பணியிட மாற்றம் உத்தரவுகள் வெளிவரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதில் மிகப்பெரும் ஊழல் அதிகாரியான RTO பூங்குலிக்கு செயலாக்க பிரிவில் இருந்து ஸ்ரீபெரும்புதூருக்கு மாற்றம் கொடுக்க கொளபாக்கம் விஜயகுமாரால் உத்திரவிடப்படுகிறது

அய்யகோ... போக்குவரத்து துறையில் அமைச்சர் எப்படி செயலற்று போனார் ?

யார் இந்த விஷ்வா ? கொளப்பாக்கம் விஜயகுமாருக்கும் இவருக்கும் என்ன தொடர்பு ?

போக்குவரத்து துறையில் நடப்பதுதான் என்ன ?

விஜிலென்ஸ் அதிரடி காணுமா ?

கோடிகளில் நடக்குது ஊழல்கள்... இவற்றிற்கெல்லாம் நமது தொடர் விசாரணை பதிவுகள் அடுத்தடுத்து பார்ப்போம்.

மொத்தத்தில், அமைச்சரை டம்மியாக்கிய இவர்கள் போக்குவரத்து துறை ஆணையரான நேர்மையான அதிகாரியின் பெயருக்கு மிகப்பெரும் களங்கத்தை ஏற்படுத்திவிடுவார்கள் என்ற செய்திகளாக பல்வேறு தரப்பில் இருந்தும் நமக்கு கிடைக்கப்பெறுகிறது.

**நெல்லை கோபால்**
மூத்த பத்திரிகையாளர்
9994478389

07–07–2022 இரவு 9.00 மணி